காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

2—4—72

★

உள்ளே......

"குமுதத்தின் நைப்பாசை!" (தலையங்கம்)

★

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (2) (டாக்டர் அறிஞர் அண்ணா)

★

மடமான்! (இலக்கியக் கட்டுரை)

★

விலையாக வேண்டிய பொருள்...... (சிறு கதை)

விலை 25 காசு

வாழ்ந்து காட்டு!

(கன்னல்)

★

அஞ்சுவதேன் செந்தமிழா உனது வாழ்க்கை
ஆடிவரும் பூங்காற்றாய் மாற லாகும்,
வெஞ்சமரில் வாழ்வதற்கு நீங்கள் என்ன
விளையாட்டுப் பிள்ளைகளா? ஏவ......லாளா?
பஞ்சினிலே தீவைத்தால் என்ன வாகும்?
பைந்தமிழர் தோளெழுந்தால் புவியா மிஞ்சும்?
நெஞ்சினிலே செங்குருதி ஓடும் போது
நின்நினைவு கனவாகப் போகு மோதான்?

சீரிழந்த மொழியெல்லாம் ஆளும் போது
செந்தமிழா பார்த்துக் கொண்டி ருக்கின்றாயே!
பேரிழந்து போனதடா தமிழின் கூடப்
பிறந்தபல மொழியெல்லாம் இற்றை நாளில்...
சீரிவரும் வேங்கையின் முயலின் கூட்டம்
சிரித்ததென வரலாறு கேட்ட துண்டோ?
யாரிவர்கள் எனநினைக்கும் பகைவர்க் கெல்லாம்
யாம்தமிழர் எனக்காட்ட எழுந்து வாரீர்!

தாழ்வென்றும் உயர்வென்றும் வேற்று மைகள்
தமிழகத்தில் இருப்பதுவும் நன்றே யாமோ?
யாழ்போல இனிக்கின்ற தமிழை நாட்டில்
யாவருக்கும் பரப்புகின்ற பணிதான் செய்வோன்
வாழ்க்கையிலே தமிழர்க்குள் உயர்ந்தோ னாவான்
வண்டமிழா, செந்தமிழை மறந்து நாட்டில்
வாழ்கின்ற எல்லோரும் இழிந்தோ னாவான்,
"வரிப்புலியே, இதையுணர்ந்து வாழ்ந்து காட்டு."

நீயெங்கு போனாய்?

கன்னி ஒருத்தி காற்றோடு வந்தாள்
என்னி டமேதான் நேற்றிரவு இருந்தாள்
பொன்னகை பூட்டிய சந்தன உடம்பு
புன்னகை கூட்டிய தேன்சுவை இதழே
கன்னி கயல்விழி காரிகை கரும்பே
என்னி டம்வா என்றே கூவினேன்
அமர்ந்தாள் அருகில் அவளையே கண்டேன்
நிமிர்ந்து அமர்ந்தேன் தனியே இருந்தாள்
கண்ணினைக் கண்டேன் காந்த மேதான்
சொல்லினைக் கேட்டேன் வேர்ப்பலா வேதான்
முத்தினைக் கண்டேன் பல்தனைக் காணோம்
எத்தனை அழகு சொல்லேது போ! போ!
கன்னம் சிவந்த அவளைக் கண்டு
எண்ணம் எனக்கோ எத்தனை எத்தனை
வண்ணம் கூட்டிய ஓவிய உடம்பு
பின்னம் எனக்கே எத்தனை தெம்பு
இன்னும் சொல்வேன் நீஇதை நம்பு
திண்ணம் நானுனது உயிர்படர் கொம்பு
முல்லைக் கொடியே! முத்துச் சரமே!
தொல்லை இனியே என்றால் இலையே
வாய்தி றந்து முத்துதி ராதோ
காய்க னிந்து கைவ ராதோ
காவிரி ஆறே! கானல் வரியே!
பூவிரி இதழில் புன்னகை புரியே;
பேச்சுக் கேளா என்உடம்பு உடனே
மூச்சு நிறுத்தி விடுமேஎன் றேனே
தேனே மானே தென்கடல் மீனே
நானே உனையே நினைந்தேங்கி னேனே
தானே பழுத்த கனியே! காலம்
வீணே செல்ல நீவிடு வானேன்
சிலையாக இருந்தாள் பதிலேது மில்லையே
நிலையாக இருந்தாள் சொல்லேது மில்லையே
நின்றாள் நடந்தாள் சிரித்தாள் பின்னே
சென்றாள் மறைந்தாள் கொன்றாள் எனையே
ஏனிங்கு வந்தாள் எப்படிப் போனாள்
நானிங்கு ஏங்க நீயெங்கு போனாய்
வண்ணப் பட்டாம் பூச்சி அவளோ
சின்னப் பெண்தான் சிற்றிடை யாளோ
நேற்று வந்தாள் இன்று போனாள்
காற்று வந்து போவது போல்தான்
கனவில் வந்தாள் நினைவில் நின்றாள்
வினவு கின்றேன் யாரளவள் எனவே?

—கு. மாதவிமணாளன்.



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13   ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 2—4—72 | இதழ் 38

குமுதத்தின் "நைப்பாசை!"

"குமுதம்" என்ற ஒரு பொழுது போக்கு வார இதழ் இப்போதெல்லாம், அரசியலைக் கூட ஒரு பொழுது போக்குப் பிரச்னையாகக் கருதி, அந்தக் கண்ணோட்டத்திலேயே செய்திகளை அணுகி, அதற்கேற்பவே தனது தலையங்கத்தையும் தீட்டி விளையாடிக்கொண்டு வரத் தொடங்கி இருக்கிறது.

குமுதம், தனது 30-3-72-ஆம் நாளைய இதழில் "நைப்பாசை" என்ற தலைப்பில் தலையங்கம் ஒன்று எழுதி, கவிழ்க்கப்பட இருக்கும் கழக அரசைக் காப்பாற்றி விட்டதாக நினைத்து நகைப்புக் கிடமான தகவல்களைத் தந்து நாட்டு மக்கள் அனைவருமே, நாட்டு நடப்புக்கள் பற்றி எதுவுமே அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்று அது அறிந்து வைத்திருக்கிறது என்ற பேருண்மையைச் சொல்லாமற் சொல்லி வைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு, கவிழ்க்கப்படக்கூடும் என்ற தகவலைத் தந்து, அவ்வாறு கவிழ்க்கப்பட்டால், தமிழகம் வாளாவிராது என்பதையும் தமிழக முதல்வர் அறிவித்திருந்தார்.

முதல்வர் அவர்கள் அவ்வாறு அறிவிப்பதற்குப் பல விபரங்கள் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். பல இரகசியத் தகவல்களும் கிடைத்திருக்க வேண்டும். அதனாலேயே முதல்வரும் அதனை நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

அவரது அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் மரணப் படுக்கையில் நெளிந்துகொண்டிருக்கும் சிண்டிகேடர்களது பேச்சும் எழுத்தும், கலைஞரது தகவல் உண்மைதான் என்பதை நிரூபித்துக்கொண்டிருந்த வேளையில், "புதுக் கல்யாணம்" செய்து கொண்டுள்ள புதுக்காங்கிரசுக் கட்சியின் அந்தஸ்த்து மிகுந்த அமைச்சர்களது பேச்சும் நடவடிக்கையும், தமிழக அரசைச் சட்டை செய்யாததாகவே காட்டிக் கொள்வதாக அமைந்திருந்தது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், மோகன் குமாரமங்கலம் என்ற மத்திய அமைச்சரும், சுப்பிரமணியம் என்ற மத்திய அமைச்சரும் சிம்சன் கம்பெனி விவகாரங்கள் தொடர்பாகவும், வேறு சில சந்தர்ப்பங்களிலும் பேசிய பேச்சுக்கள் முதல்வரின் குற்றச்சாட்டை உறுதி செய்துகொண்டிருந்தன.

அண்மையில் நடைபெற்ற மாநிலங்களுக்கான தேர்தல்களில் இந்திரா அம்மையாரது கட்சியே பெரும்பான்மை பற்றும் என்று அரசியல் கணிப்பாளர்கள் கணித்து வைத்திருந்ததைப் போலவே, முடிவுகளும் வெளிவந்த பிறகு, மோகன் குமாரமங்கலம் என்பவரது பேச்சு, ஜனநாயக மரபையே எவ்வளவு கேவலமாக அவர் மதித்திருக்கிறார் என்பதற்கு சரியான இலக்கியமாக அமைந்திருந்தது.

காமராசரது ஊழல் ஊழல் என்ற ஒப்பாரிகள் சரியான சமயத்தில் உச்சஸ்தாயியில் கிளம்பத் தொடங்கியது.

நாட்டு நிலைமைகளும், அந்த நிலைக்கு நாட்டைத் தூண்டிவிட்டவர்களது நைப்பாசைகளும், கழக ஆட்சி கவிழ்ந்தே தீரவேண்டும் என்பதைக் காட்டுவனவாகவே அமைந்திருந்தன.

> "விரைவில், தமிழ்நாட்டு அரசியலில் விறுவிறுப்பான மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. புரட்சிகரமான மாறுதல்களாக அவை இருக்கும்"

என்று குறிப்பிட்டிருந்தார் தமிழ்நாட்டு வக்கில்.

அந்தச் சொற்களின் உண்மையான பொருளைப் புரிந்துகொண்டதனாலேயோ அல்லது புரிவிக்கப்பட்டதன் விளைவாகவோ, உடனேயே தனது கூற்றுக்கு விளக்கம் தந்துவிட்டார் அந்த தொழிலாளர்களைப் பற்றி "எல்லாம் தெரிந்த" அமைச்சர்.

இத்தகைய புரளிகள் அனைத்தும் ஒரு புரளியே என்று ஆகிவிட்ட பின்னர், குமுதம் இதழ், தனது 'நைப்பாசை' என்ற தலையங்கத்தின் மூலம், தனது இதயத்திலிருக்கும் நைப்பாசையைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

> "கழகம் ஆட்சிக்கு வந்து சில வருடங்கள் ஆகிவிட்டன; கழக ஆட்சியால் கழகத்தினருக்கு ஏற்பட்டுள்ள லாப நஷ்டங்களையும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள லாப நஷ்டங்களைவும் மக்கள் அமைதியாகக் கணக்குப் போட்டுப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்."

என்று விளக்கம் கொடுத்து, அதனால் "மத்திய அரசே, நீயாக அதனைக் கவிழ்க்காதே! தானாக விரைவில் கவிழ்வார்கள்!" என்று சொல்லாமற் சொல்லி இருக்கிறது.

"மத்திய அரசு முன்வந்து கழகஅரசைக் கவிழ்க்குமானால், கவிழ்க்கப்படுவதன் நோக்கம் ஈடேறாமல் போய்விடும்; தானாகக் கவிழ்ந்தால்தான் அது நிறைவேறும்" என்று விளக்கம் வேறு கொடுத்திருக்கிறது.

நாட்டு மக்கள் அனைவரும் கழக அரசைக் கவிழ்த்துவிடத் துடித்துக்கொண்டிருப்பது போன்ற கனவில் "குமுதம்" இருக்கிறது என்பதுதான் சரியான படப்பிடிப்பாக இருக்கமுடியும்,

கழக அரசு, கவிழ்ந்து தீரவேண்டும் என்ற தனது உண்மையான எண்ணத்தை வெளிப்படுத்திக் காட்டிவிட்ட குமுதத்துக்கு நன்றி கூறிக்கொள்ளத் தான் வேண்டும்.

ஏனென்றால், இந்திரா அம்மையார் 1972-இல் 1957ஐ உருவாக்கி இருக்கிறார் அல்லவா! அந்த உருவாக்களில், குமுதத்தின் நைப்பாசையும் தோன்ற வாய்ப்புண்டல்லவா! அதற்காக!

ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம்! சிண்டுமுடிந்து விட்டு வேடிக்கை பார்க்கும் பொழுதுபோக்கு, அரசியலிலும் என்றால், விளைவுகள் விபரீதமாகத்தானிருக்கும்.

வரலாறு என்பது முற்றுப்பெற்றுவிட்டதொன்று அல்ல—முடிவே இல்லாதது! தனி மனிதருக்குமட்டுமல்ல; நாடுகளுக்கும் கூடத்தான்!

—திருவாரூர் முத்துராமன்.

மனித மாடுகள்!

உலக வரலாற்றில் பல பயங்கரக் கொடுமைகள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் நம் நெஞ்சங்களை பிழிந்தெடுக்கத்தக்க கொடுமைதான் அடிமை வாணிபம், பற்பல நாட்டினர். பல்வேறு காலங்களில் இந்தப் பாதகம் புரிந்துள்ளனர்.

1481 லேயே போர்த்துகீசியர்கள். அங்கோலாவிலிருந்து அடிமைகளை ஏற்றுமதி செய்துள்ளனர்.

ஆனால் 400 ஆண்டுகள் நீடித்த வாணிபம் ஆப்பிரிக்காவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் நடைபெற்றது. அமெரிக்க தோட்டங்களில் வேலைசெய்வதற்காக நீக்ரோக்களும், மற்றவர்களும் பலாத்காரமாக கடத்தப்பட்டனர்.

மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் இருட்டில் இறங்குவதும், கிராமங்களுக்கு நெருப்பு வைப்பதும், வயதுவந்தவர்களை தூக்கிச் செல்வதும் வழக்கமாகிவிட்டது.

ஆப்பிரிக்காவிலேயே பல்வேறு வகையினரும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வதுண்டு, இதில் வெற்றி பெற்ற தலைவர்களிடம் மணிகள், கம்பளங்கள், முதலிய பொருள்களைத் தந்து, சிறைபிடிக்கப்பட்டவர்களை வாங்கினார்கள், தோல்வியுற்றவர்களை கொப்பறைகளில்போட்டு சமைத்துச் சாப்பிட்டனர். எதிர்த்தவர்களை அடிமை வியாபாரிகளிடம் விற்றுவிட்டனர். கரை ஓரங்களிலிருந்த கொள்ளைக் கூட்டங்களும் அடிமைகளைக் கைப்பற்றின, அடிமை விற்பனையில் ஈடுபட்ட அரசர்களும் உண்டு.

அடிமைகள் அமெரிக்காவை அடைவதற்குள் மூன்று பயணங்களைச் செய்யவேண்டியிருந்தது. தங்கள் சொந்த ஊர்களிலிருந்து மேற்குக்கரைக்கு செல்வது முதல் பயணம். அட்லாண்டிக் பெருங்கடலைக் கடப்பது இரண்டாவது பயணம். அமெரிக்கத் துறைமுகத்திலிருந்து தோட்டங்களுக்கு செல்வது மூன்றாவது பயணம.

அடிமைகளை நன்கு விலங்கிட்ட பிறகு கப்பல் என்றுக்கு 600, 700 பேர்வீதம் அடுக்கினர், அடிமைகள் உட்காரவும், நிமிரவும் முடியாத அவல நிலை! சுகாதாரவசதிகள் ஏதுமில்லாததால் மைல்கணக்கில் நாற்றம்! இந்தப்பயணத்தில் நூற்றுக்கு பத்துப் பனிரண்டு பேர் இதை தாங்கமாட்டாமல் இறந்துவிட்டனர்.

தினமும், காலையில் கப்பல் தலைவன் அடிமைகளைப் பார்வையிட்டான், இறந்தவர்களைக் கடலில் எறிந்துவிட்டு மற்றவர்களுக்கு மாட்டுக்குத் தீனிபோடுவது போல் உணவளித்துவிட்டு மீண்டும் 'அடுக்கி' விடுவார்கள். எதிர்த்தவர்களுக்கு சாட்டையடி; இதையும் தாங்கிக் கொண்டு எதிர்ப்புக் காட்டியவர்களுக்குக் கொதிக்கும் தண்ணீர் முழுக்காட்டல்! இப்படியாக பலநாட்கள் கழிந்து அமெரிக்கக்கடற்கரையை அடைந்தன—அந்த மனித மாடுகள்.! அவர்களை அடிமைச் சந்தையில் விற்றார்கள்! தலைக்கு ஐந்து பவுன்! இதனால் அடிமை வணிகருக்கு கொள்ளை இலாபம்.

தோட்டங்களில் வேலை செய்ய கடுமையான பயிற்சியளிக்கப்பட்டது. இதில் மூன்றில் ஒரு பங்கினர் சாவைத்தழுவினர், எஞ்சியவர்கள் சாகும்வரை மாடுபோல் உழைத்துச் செத்தனர்.

இந்தக் கொடுமைக்கு மெள்ள மெள்ள பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. இதைக்கண்டு நெஞ்சு பதைபதைத்து ஐம்பது ஆண்டுகள் அரும்பாடு பட்டவர் வில்பர் போர்ஸ் என்ற ஆங்கிலப்பெரியார், இவரது முயற்சியின் பயனாக 1787ல் பிரட்டனில் அடிமை வாணிப ஒழிப்புச் சங்கம் ஏற்பட்டது.

இறுதியில், அடிமை வாணிபம் மிகவும் பாதகமானது என்பதை உலகம் உணர்ந்தது, இதை ஒழிப்பதற்காக ஸ்பெயினுக்கு பிரிட்டன் ஐந்து இலட்சம் பவுன்களை நஷ்டஇடாக அளித்தது. ரஷ்யா, டென்மார்க் போன்ற நாடுகளுக்கும் இதேபோல் நஷ்டஈடு அளிக்கப்பட்டது. 1836ல் பிரேசில் பணிந்தது.

1833ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அடிமை வாணிபத்துக்கு சாவுமணி அடித்தது, இதற்கு நஷ்ட ஈடாக இரண்டு கோடி பவுன்கள் தரப்பட்டன ஆனால் அதனால் ஏழுஇலட்சத்து எழுபதாயிரம் அடிமைகளின் விலங்குகள் நொறுக்கப்பட்டன!

அமெரிக்காவில் மட்டும் அடிமை வாணிபம் நீடித்தது, வாஷிங்டன், ஜெபர்சன், மேடிசன். மன்றோ, ஜாக்சன், டைலர், போக், டெயிலர், ஜான்சன், கிராண்ட் ஆகிய பத்து ஜனாதிபதிகளும் அடிமைகளை வைத்திருந்தனர். இறுதியில், 1862ல் அமெரிக்காவிலும் அடிமை வாணிபம் ஒழிக்கப்பட்டது, அப்போது 3,953,760 ஆண்களும், பெண்களும் விடுதலை பெற்றனர்.

ஆப்பிரிக்க அடிமை வாணிபம் சுமார் நான்கு நூற்றாண்டுகள் நடைபெற்றது. கிட்டத்தட்ட ஒன்றரைகோடி நீக்ரோக்கள் கட்டாயமாக கடத்தப்பட்டனர். வழியில் இறந்தவர்கள் எண்ணற்றவர்கள்!

1926லும் அடிமைகள் இருந்ததாகத் தெரிந்து, 40, நாடுகள் அடிமை எதிர்ப்பு உடன்பாட்டில் கையெழுத்திட்டன, 1938ல் கூட 12 நாடுகளில் அழமைத்தனம் இருந்ததாக சர்வதேச சங்கம் தெரிவித்தது.

அடிமை வாணிபம் மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகளின் மணிமுடி போன்றது. அதை ஒழிக்க அரும்பாடுபட்ட வீரர்களுக்கு நம் வணக்கம்!. *

— எ. பி. சனார்த்தனம் —

அவள் வாழ வேண்டியவள்...

(ஜே. வி. நாதன்)

“இன்னிக்கு சாயங்காலம் தனம் மாள் வீணைக்கச்சேரி இருக்கு ரேடியோ ரிப்போர்க்காரன் கிட்டேகண்டிச்சுச் சொல்லி ரேடியோவை வாங்கிண்டு வாங்கோ!’ என்று என் அகமுடையாள் இட்ட உத்தரவைத் தலைமேல் தாங்கிக்கொண்டு, ரேடியோக்கடை பாலுவைத் தேடிக்கொண்டு போன போதுதான், பாலு சொன்னான் —அந்த அதிசயத்தை!

இந்தக் காலத்திலும் இப்படி நடக்குமா?

“சார், ஆத்துலே எல்லார் கிட்டேயும் எச்சரிக்கை பண்ணி வையுங்கள். எவனுவது தெருவில் போகிறவன் விபூதி, குங்குமம்னு எதைத் தந்தாலும் வாங்கச் சொல்லாதீங்க...காலம் ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது,”

பாலு எதற்காகஇப்படிச் சொல்கிறான் என்பது எனக்குப் புரியவில்லை.

“உங்களுக்கு விஷயமே தெரியாதா சார்? ஊர் பூராவும் தெரிஞ்சிருக்கே!...... ”என்று என் பக்கத்தில் வந்தான் பாலு.

“உங்க நண்பர் சர்மா இல்லே, அதுதான் சார், முன்சீப் கோர்ட்டுக்குப் பக்கத்தில் கேண்டீன் வெச்சிருக்காரே! அவரும் அவருடைய பெண்ணும் பாலமான் பாலத்துக்கு முந்தாநாள் காலையிலே குளிக்கப் போனார்களாம். குளிச்சிட்டு வரும்போது முன்பின் தெரியாத ஆசாமி ஒருத்தன் வந்து ‘இந்தாங்க பழனி விபூதி! என்று நீட்டியிருக்கிறான். இவர்களும் வாங்கி நெற்றியில் பூசிக் கொண்டிருக்கிறார்கள்...” பேச்சு தடைப்பட்டது.

“பூனைக்குட்டி போட்ட டார்ச் லைட் செல் இருக்கா?” என்று கேட்டு யாரோ ஒருஆள் வந்தான். பாலு வியாபாரத்தைக் கவனித்து விட்டு மறுபடியும் வரும்வரை நான் காத்திருக்கும்படி ஆயிற்று.

“அப்புறம் என்ன நடந்சுது?...” என்று சுவாரஸ்யத்தோடு கேட்டேன் நான்.

“அப்புறம் என்ன?... விபூதி பூசிண்டதன் பலன் குளிக்கப் போகும்போது இரண்டு பேராகப் போனவர்கள், திரும்பி வரும் போது ஒருவராகத்தான் வர முடிந்தது! ஆமாம் சார், சாமா மாத்திரம்தான் வீட்டுக்குத் திரும்பியிருக்கிறார். சாமாவின் பெண் போன இடம் தெரியவில்லை!” அவரைக் கேட்டால் தெரியாது என்று மிரள மிரள விழிக்கிறார்...”

திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தேன். “அதிசயமாக அல்லவா இருக்கிறது! விபூதி வாங்கிப் பூசிக்கொண்டதற்கும், பெண் காணமல் போனதற்கும் என்ன சம்பந்தம்...?” புரியாமல் கேட்டேன்.

பாலு சிரித்தான், “புரியவில்லையா சார்?... நான்ஒரு உண்மைச் சம்பவத்தைச் சொல்கிறேன். கவனமாக் கேளுங்க. எங்க கிராமத்திலே ஒருநாள் குடுகுடுப்பைக்காரன் பிச்சை கேட்டுக்கொண்டு வந்தான். தெற்குத் தெருவிலே ஒரு வீடு. அந்த வீட்டில் இருந்த பெண் கொஞ்சம் அரிசி எடுத்திண்டு வந்து தர்மம் போட்டிருக்கிறாள். ‘நீ நல்லா இருன்னு சொல்லி அவளுக்கு அவன் குங்குமம் கொடுத்திருக்கிறான். அதை வாங்கின பெண் உடனே நெற்றியில் இட்டுக்கலையாம். கை வேலையாக இருந்ததினால் வேலை முடிந்து முகம் அலம்பிண்டப்புறம் வெச்சிக்கலாம்னு கையில் இருந்த குங்குமத்தை உள்ளே போய் அம்மிக் கல்லில் ஒரு பக்கம் கொட்டிட்டு வேலைகளைப் பார்த்திருக்கிறாள்; அப்புறம் இந்தக் குங்குமத்தையே மறந்துவிட்டாளாம். நடு நிசி. ரெண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போயிருந்த புருஷனை எதிர்பார்த்துப் பாதி தூங்கியும் தூங்காமலும் படுத்திருக்கிறாள். நடுநிசி என்று சொன்னேனு, பாதித் தூக்கத்திலே கதவை ‘பட்பட்’டுனு தட்டுகிற சப்தம்! இந்தப் பெண் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, ஓடிப் போய் கதவைத் திறந்து பார்த்தால்... ஒரே இருட்டு— வெளியில் ஆள் அரவமே காணும்! கதவு தட்டின சப்தம் பிரமையாக இருக்குமோ என்று கதவைத் தாழ்ப்பாள் போடப் போனபோது குனிந்து பார்த்திருக்கிறாள். அவள் காலருகில்... ‘வீல்’னு சத்தம் போட்டு அவள் அலறி, வீட்டிலிருந்த அப்பா, அம்மா-அக்கம் பக்கம் எல்லாம் விழிச்சுண்டு ஓடி வந்திருக்கிறார்கள். இவள் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு கதவுக்குக் கீழே கையைக் காட்டியிருக்கிறாள். வீட்டுக்குள்இருந்த அம்மிக்கல் கதவுக்குக் கீழே செங்குத்தாக நின்று கொண்டிருந்தது! யாருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

“மதியத்தில் பிறகு இட்டுக்கொள்ளலாம்னு குடுகுடுப்பைக்காரன் கொடுத்த குங்குமத்தைக் கொட்டி வைத்திருந்தாளே, அதே அம்மிக்கல்தான் அது! தானுக நகர்ந்து போய் அது கதவருகில் போய் மோதிக்கொண்ட சப்தம் தான், கணவன் வந்து விட்டானே என்று இவளை எண்ண வைத்திருக்கிறது; என்ன இது ஆச்சர்யம், என்று எல்லோரும் பார்த்துண்டிருக்கச்சயே, அம்மிக்கல் நிலைப்படியைத்தாண்டி, மெல்ல நகர்ந்து தெருவில் போக ஆரம்பித்தது. நட்ட நடு ராத்திரியில் இப்படி ஒரு பயங்கரத்தைப் பார்த்தபின் யாருக்குத் தூக்கம் வரும்? தடி, கம்பு என்று ஆளுக்கு ஆள் தூக்கிக் அம்மிக்கல்லின் பின்னலேயே போயிருக்கிறார்கள். அம்மிக்கல் நகர்ந்து நகர்ந்து கடைசியாக சுடுகாட்டுக்குப் போயிருக்கு. பின்னல் போனவர்கள் அம்மிக்கல்லை முன்னே விட்டு, பதுங்கிப் பதுங்கிப் போய்ப் பார்த்தால்...

அங்கே—

மத்தியானம் ஊருக்குள் வீடு வீடாப் பிச்சை வாங்கிண்டு போன குடுகுடுப்பைக்காரன் கண்ணை மூடி உட்கார்ந்து ஏதோ மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்தானும், அவன் முன்னல் மண்டை ஓடு ‘எலும்புகள்’ எலுமிச்சம்பழம்—

சிறுகதை!

சாம்பிராணிப்புகை என்று ஏதேதோ இருந்ததாம். அம்மிக்கல் குடுகுடுப்பைக்காரன் முன்னுல் போய் நின்றது. "வந்தாயா பெண்ணே!" என்று கண்ணைத் திறந்த குடுகுடுப்பைக்காரன் அம்மிக்கல்லைப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் முழிச்சிருக்கான். பின்னுலேயே போன ஆட்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு ஆளுக்கு ஆள் செமத்தியா கழியாலும் கையாலும் போட்டு முதுகை வீங்க வெச்சு போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துப் போனுர்களாம்! பாருங்க சார், குங்குமத்தை அம்மிக்கல்லில் கொட்டாமல் அந்தப் பெண் நெற்றியிலே இட்டுக் கொண்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?... அந்தப்பயல் சுடுகாட்டில் உட்கார்ந்துண்டு மந்திரம் ஜெபிக்க ஜெபிக்க அம்மிக்கல் நடு ராத்திரியிலே போனுப் போல, இவளும் மந்திர சக்திக்கு உட்பட்டு எழுந்து போயிருக்க வேண்டியவள் தானே?...

மூச்சுவிடாமல் பேசிக் கொண்டு போன பாலு கதையை நிறுத்தினுன்.

"இந்த புஷ் கர்...முர்..னு..சத்தம் போடுதுங்க, கொஞ்சம் பாருங்க!" என்று ஒரு கிராமத்துப் பேர்வழி டிரான்சிஸ்டரை நீட்டவும் பாலு தொழிலைக் கவனிக்க எழுந்தான்.

அவன் சொன்ன கதையையே என் மனம் தீவிரமாக அலசிக் கொண்டிருந்தது. சாமாவின் பெண்ணையும் இப்படித்தான் பழனிவிபூதி கொடுத்த ஆசாமி மந்திரத்தால் கொண்டு போயிருப்பானே?... சாமா மிகவும் நல்ல மனிதர். அவருக்கு இப்படி ஒரு அசம்பாவிதம் நடக்கலாமா?

"சரியப்பா, பாலு! ரிப்பேரைப் பார்த்து நம்ம ரேடியோவை யார் மூலமாகவாது வீட்டுக்கு அனுப்பி வெச்சிடு ... என்ன?" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

மறுநாள்.

காபி சாப்பிட்டுவிட்டு பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அடுக்களையில் இருந்தபடியே அர்ச்சனையை ஆரம்பித்துவிட்டாள் என் அகத்துக்காரி.

"காலை நேரத்தில் காதுக்கு இனிமையாய் — மங்களகரமா ஒரு இசை முழங்க வேண்டாமோ?... ரேடியோவை நேத்திக்கே அனுப்பி வைக்கிறதாச் சொன்னுரே, உங்க ரேடியோக்கடை ப்ரண்டு...என்ன ஆச்சு, மறந்து போயிட்டாரோ?"

பேப்பரை மடித்து வைத்து விட்டு எழுந்து விட்டேன், நான் குடையை எடுப்பதைப் பார்த்த ராஜம், "இந்தாங்க...வர்ற வழியிலே மார்க்கெட்டுக்குள் நுழைந்து பிஞ்சுக் கத்தரியா இருந்தா கொஞ்சம் வாங்கிண்டு வாங்க," என்று ஒரு பையைக் கொண்டு வந்து நீட்டினுள். வாங்கிக் கொண்டு கிளம்பினேன். கோயிலுக்குக் குறுக்கே புகுந்தால் தெற்கு சந்நிதி வழியாக பாலு ரேடியோக்கடை, கிட்டே தான்.

"நேற்றே வேலை முடிஞ்சுடுத்து, சார்! ஆள் ஒருத்தனும் அகப்படலை. இப்ப அனுப்பிடறேன்... டேய் நாணு! சித்த இந்த ஜி. இ. சி. ஐ. சைக்கிள்லே வெச்சு இந்த மாமா ஆத்துலே கொண்டு கொடுத்துட்டு வந்திடறியா?... வீடு தெரியுமோன்னே புதுத் தெருவிலே..."

பையன், தனக்கு வீடு தெரியும் என்று தலையசைத்து விட்டு ரேடியோவை சைகிளின் பின்னுல் வைத்துக் கொண்டு நடந்தான். "ஜாக்கிரதை...சைகிளைத் தள்ளிக் கொண்டு நடந்தே போ!" என்று எச்சரித்து விட்டுத் திரும்பினுன் பாலு.

"உக்காருங்க சார், காபி சாப்பிடறேளா?"

"அதெல்லாம் வேண்டாம்பா, இப்பத்தான் சாப்பிட்டேன்?"

"சார்... லேட்டஸ்ட் இன்ஃபர்மேஷன் என்ன தெரியுமோ?', என்று சிரித்துக் கொண்டே பாலு கேட்டபோது, அவன் எதைப்பற்றிக் கேட்கிருன் என்று எனக்குப் புரியவில்லை. "நீ எதைச் சொல்கிருய்?"

"அதுதான் சார்......நேத்திக்கு நாம பேசலையா, சாமாவோட டாட்டர் விஷயம்..."

"ஓ, அதுவா, என்ன சாமாவின் பெண் அகப்பட்டு விட்டாளா?... ஆவலோடு கேட்டேன்.

பாலு என் பக்கத்தில் வந்தான். மெல்லிய குரலில் கூறினுன்: "சார், விபூதியும் இல்லை, மந்திரமும் இல்லே—எல்லாம் டூப்பு சார், டூப்பு!"

"டூப்பா! நீ என்ன சொல்றே?"

"நம்பினுல் நம்புங்க — இல்லாட்டி விடுங்க சார், தகப்பனுர் பெண்ணும் குளிக்கப் போனது உண்மை. யாரோ விபூதி தந்ததும் உண்மை, ஆனுல் ஆக்ர்சுவலா ஆற்றில் குளித்தது சாமா மட்டும் தான், தலைவலிக்கிறதுன்னு சொல்லிட்டு பெண்ணு குளிக்கவே இல்லியாம். அப்புறம் திரும்பி வர்றச்சே, நீங்க வீட்டுக்குப் போங்கப்பா—நான் இந்தத் தெருவிலே என் தோழி ஒருத்தியைப் பார்த்து விட்டு வர்றேன்னு சொல்லிட்டுப் அந்தப் பெண் போயிருக்கிருள்! இவர் சரின்னு சொல்லிட்டு வீட்டைப் பார்க்க நடந்திருக்கிருர்... என்ன அப்படிப் பார்க்கறேள்? எல்லாம் கரெக்ட் இன்ஃபர்மேஷன், அவாளோட நெருங்கின பந்துக்காரர்! காப்பிக்கொட்டை வியாபாரி நாகசாமி இல்லை—அவரே என்னண்டை சொன்ன சமாச்சாரமாக்கும்!"

"ம்...ம்...தோழியைப் பார்க்கப் போறேன்னு போன பொன்னு என்ன ஆனுளாம்?"

"அவசரப் படறீங்களே சார்... கொத்தங்குடித் தெருவிலே தோழியைப் பார்க்கப் போறேன்னு சொல்லிட்டு நுழைஞ்ச பொண்ணு ஏழே முக்கால் மணிக்குக் கிளம்புகிற மதுரை பாஸஞ்சர் வண்டியில் யாரோ ஒரு வாலிபப் பையன்கூட உட்கார்ந்து போனதை ஆசாமிகள் பார்த்திருக்கிருர்கள்......" என்று பாலு முடித்தபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"பாலு! நீ சொல்றதெல்லாம் நிஜம்தானு?"...... மனம் பதறிக் கேட்டதற்கு அவன் சிரிப்புதான் பதில் சொல்லியது, நூற்றுக்குநூறு உண்மை என்று.

ரேடியோ ரிப்பேர் சார்ஜ் என்று அவன் கேட்டதைக் கொடுத்து விட்டு வருகிற வழியில் எதிர்ப்பட்டுப் பேசஆரம்பித்த ரிடையர்ட் தாசில்தார் கேசவ மூர்த்தியுடன் கொஞ்சம் அரசியலை அலசிவிட்டு, மார்க்கெட்டில் நுழைந்து கத்தரியும் அவரைக் காயும், கொஞ்சம் பச்சை மிளகாய், கருவேப்பிலையும் வாங்கிக்கொண்டு நடந்து வீட்டுக்குள் நுழைந்தபோது என் மனவேகம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. ஓ!......... என் நண்பனின் பெண் செய்த காரியம்!......... என் மனம் அழுதது. காலம் கெட்டு விட்டது; காலம் கெட்டுவிட்டது......

கூடத்து பீரோவுக்கு மேல் ரேடியோ உட்கார்ந்திருந்தது. பாலுவிடம் கேள்விப்பட்ட விஷயத்தை என் மனைவி ராஜத்திடம் கூற வேண்டுமென்று விரைந்து வந்தவனுக்கு, உள்ளே யாரோ வேற்றுக் குரல் அவளுடன் இதைப் பற்றியே பேசுவது வியப்பைத் தந்தது. காப்பிக்கொட்டை வியாபாரி நாகசாமியின் சம்சாரம்! அவள் ஒரு 'லவுட் ஸ்பீக்கர்';—அதாவது சாமாவின் பெண் கீதா

யார்ரோ ஒரு பையனுடன் ஓடிவிட்டதைக் கண்ணும் காதும் மூக்கும் வைத்து ரொம்பவும் உற்சாகமாக என் மனைவியிடம் வருணித்துக் கொண்டிருந்தாள்.

"டீ ராஜம், இந்தக் குட்டிக்கும் அந்தப் பயலுக்கும் ரெண்டு வருஷமாத் தொடர்பு உண்டாம். கருமம். அவன் "டாண்'ணு ஏழரை மணிக்கு ஸ்டேஷனுக்கு வரச் சொல்லியிருக்கான். இவளும் தகப்பனுக்கு 'டோக்கர்' கொடுத்துட்டு கரெக்டாப் போயிட்டாள். ஜாலியாக் கை கோத்திண்டு ரெண்டு பேரும் ரெயில்லே ஏறிண்டாளாம். என் தம்பி மகன் தன் கண்ணாலே பார்த்துட்டு வந்திருக்கான், இந்தக் கர்மத்தை! எந்த ஊருக்குப் போய்த் தொலைஞ்சாளோ?...என்ன உத்தேசமோ?... நமக்கு எதுக்குடீயம்மா வீண் வம்பு தும்பு?...... என்னமோ ஊர் உலகத்துலே அநியாயம் நடந்தால் நம்ப மனசை உறுத்தறது........ இல்லியாடீ ராஜம்?......" பேசிக்கொண்டே போன நாகசாமியின் சம்சாரம் செண்பகத்தைத் தடுத்துச் சொன்னாள் என் சகதர்மினி.

"மாமி, எழுந்திருங்கோளேன்...'

"ஏண்டி, என்ன கரப்பானா?..."

"கரப்பான் ஓடறதுக்காக எழுந்திருக்கச் சொல்லலை மாமி-இனிமே இங்கே நீங்க உட்கார்ந்திருக்கறது மரியாதையில்லை. எழுந்துமுதல்லே இடத்தை காலி பண்ணுங்கோ..."

"என்னடீ, இப்ப என்ன இல்லாததைச் சொல்லிப்புட்டேன்னு கிடந்து நீ துள்ளறே?"

"இல்லாததா—வாய் அழுகிப் போறப் பொய்னா நீங்க பேசியிருக்கேள்! கண்ணா பின்னான்னு குடிச்சுட்டு, 'குப்குப்'புன்னு சதா சர்வ காலமும் சிகரெட் கர்மத்தைப் பிடிச்சிண்டு, நாலஞ்சு ரௌடிப் பசங்களோட திரிஞ்சிண்டிருக்கற உங்க புத்திர சிகாமணிக்கு கோகி மாமி தன் பெண்ணைக் கொடுக்க மறுத்துட்டாள் என்கிறதுக்காக என்னென்ன விதமா — எத்தனை அபாண்டமா கதை கட்டிப் பரப்பி விடறேளே—இது உங்களுக்கே நல்லாயிருக்கா? நரம்பு இல்லாத நாக்குதான் ஆனா பேசறவாய் அழுகிப் போயிடாதோ? ... நான் கித்த முன்னேதான் கோகிமாமி வீட்டுக்குப் போயிட்டு வந்தேன். மந்திரக்காரன் பின்னால் போய் விட்டாள், எவன் பின்னோடோ ரயில்லே ஓடிப்போயிட்டான்னு நீங்க ஊரெல்லாம் கதை கட்டி விடுகிற சாட்சாத் அந்தப் பொண் கீதா, கண்ணாலே ஜலம் விட்டுண்டு அங்கே நிக்கறது' ஏன் மாமி; விரோதம்னா என்ன வேணாலும் பேசிடலாமா? உங்களுக்கும் ஒரு பெண் தலைக்கொசந்துநிக்கிறது இல்லியா, அவளுக்கு இப்படி ஒரு பழிச் சொல் விழுந்தால் என்னா செய்வேள்? ... பேசுங்களேன் மாமி!... விலையாக வேண்டிய பொருள் இல்லியோ பெண்...நாளைக்குக் கல்யாணச் சந்தையிலே இந்தப் பழிகள் எல்லாம் விசுவரூபம் எடுத்து பெண்ணோட வாழ்க்கையை அழிச்சுடாதோ!..."

எனக்கு ஆச்சர்யம் என் மனைவி ராஜமா இத்தனை ஆக்ரோஷத்தோடு பேசுகிறாள்?

"...உங்க ஆத்துக்காரர் இப்படி அபாண்டங்களை கடைத் தெருவில் பரப்பி உபகாரம் செஞ்சுண்டிருக்கார். நீங்க இப்படி வீடு வீடா பரப்ப வந்து விட்டீர்களாக்கும்... நன்னாயிருக்கு மாமி உங்க சேவை!..." என்று என் மனைவி சாடியபோது, ரேடியோக் கடை பாலு தனக்கு இப்படி விபரங்களைக் கூறியது காப்பிக்கொட்டை வியாபாரம் செய்கிற நாகசாமி என்று என்னிடம் கூறியது ஞாபகம் வந்தது.

"...நாம எல்லாம் பெண் ஜென்மங்கள்! நாமும் பெண்களைப் பெத்திருக்கோம் இந்தப் பாவம் நமக்கு எதுக்கு மாமி?..." என்று தணிந்த குரலில் என் மனைவி பேசினாள்.

சிறிது நேரம் மௌனம்.

பிறகு நாகசாமியின் சம்சாரம் தலை குனிந்து கொண்டு வெளியே வந்தாள். தாழ்வாரத்தில் என்னைப் பார்த்ததும், அவளுடைய உடம்பு இன்னும் கூனிக் குறுகியது. அவளுடைய கண்களில் பளபளத்த நீர்த்துளிகள் அவளுடைய உள்ளத்தின் தீய எண்ணங்கள் கரைந்து கொண்டிருப்பதை உணர்த்தின.

எப்படியோ அப்பாவி சாமாவைப்போன்றே அவர் பெண்ணும் கள்ளம் கபடு அற்றவள் என்னும் உண்மை எனக்கு நிம்மதியை அளித்தது. "சபாஷ்!... வெளுத்து வாங்கி விட்டாயே ராஜி!" என்று என் மனைவியைப் பாராட்டினேன்.

"...வந்துட்டேளா, ரிப்பேர் ஆயிடுத்து என்று ரேடியோவை உங்க பிரண்டு அனுப்பிட்டார்... அது போதுமோ? பாட வேண்டாமா...மெட்ராஸை எடுக்கமாட்டேன்கறது சனியன்!..." என்று பல்லவியை ஆரம்பித்தாள்.

ஆசிரியருக்குக் கடிதம்:

மாற்றம் கிடைக்குமா?

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

சென்ற ஒரு கிழமையாக, காஞ்சிபுரத்தில் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டு, அவற்றுக்குக் குடும்பத்துக்கு ஒரு கிலோ வீதம் சர்க்கரை கொடுக்கப்பட்டு வரும் செய்தி தங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். சர்க்கரையைக் குறைந்த விலைக்குக் கொடுக்க முன்வந்த இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் என் போன்ற ஆயிரக் கணக்கானவர்களின் இந்தப் பாராட்டுக்களைப் பாழ்படுத்தி விடுகிறது, அவற்றை வழங்குவதற்காக அதிகாரிகள் செய்திருக்கும் ஏற்பாடு: ஆறு வார்டுகளுக்கு ஒரு கடை என்ற வீதத்தில் இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுளதாம். அப்படியானால் குறைந்த பட்சம் கடை ஒன்றுக்கு ஏழாயிரம் பேர், எட்டாயிரம் பேர் சென்று நின்று கொண்டிருக்கும் நிலை ஏற்படுகிறது. நீண்ட கியூவைப் பார்த்து விட்டு, வயிற்றெறிச்சல்காரர்கள் பலரும், அரசுக்கு எதிரான முறையில் விமர்சனங்களை வேறு தொடங்கி விடுகிறார்கள். சர்க்கரை வாங்க ஒவ்வொரு வீட்டினரும் ஒரு அரைநாளாவது வீணடிக்க வேண்டியிருக்கிறது. முன்பு இந்த முறை அமுலில் இருந்தபோது, வார்டுக்கு ஒரு கடை என்று இருந்தது. இப்போதும் அப்படிச் செய்து விட்டால், முனு முனுப்புக்களை ஒழிக்க முடியும் என்பது மட்டுமல்ல, மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும். சிற்சில இடங்களில் ஒரு மைல் அளவு கூட கடந்து சென்று ஒரு கிலோ சர்க்கரை வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதிகாரிகளது இந்த ஏற்பாடு, மக்களது நலன்களுக்காகத்தான் அதிகாரிகள் என்றால். இந்த புதிய ஏற்பாட்டை உடனடியாக மற்ற அடுத்த மாதம் சர்க்கரையையாவது அந்தந்த வார்டுகளில் கொடுக்க ஏற்பாடு செய்தாக வேண்டும். அரசுக்கு ஏற்படும் பழிகளுக்கு அதிகாரிகளே காரணம் என்ற நிலையை மாற்ற அதிகாரிகளும், அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அன்பன் :

கோ. அருணாசலம்,

சின்ன காஞ்சிபுரம்.

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக 5-வது மாநாடு

1972 ஏப்ரல் 8, 9, (சனி, ஞாயிறு) நாட்களில்

காஞ்சிபுரம் நகர்

இந்தி எதிர்ப்பு வீரர் விருகம்பாக்கம் அரங்கநாதன் பந்தலில்
இராசாமணி அம்மையார் அரங்கில் நடைபெறும்

தலைவர் :
எஸ். எஸ். தென்னரசு, எம்.எல்.சி.

திறப்பாளர் :
ஆலடி அருணா, B.A., B.L., எம்.எல்.ஏ.

அறிஞர் அண்ணா படத் திறப்பு

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார்

கழகத் தலைவர் டாக்டர் கலைஞர்
பொதுச் செயலாளர் டாக்டர் நாவலர்
பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

மற்றும் கழக முன்னணியினர் அனைவரும்
மாநாட்டில் பங்கேற்கின்றனர்

ஏப்ரல் 8 சனிக்கிழமையன்று
மாநாடு துவக்கத்திற்கு முன்

மாபெரும் ஊர்வலம் நடைபெறும்!

இரு நாட்களிலும்: டாக்டர் கலைஞரின்
"வெள்ளிக்கிழமை" "சிலப்பதிகாரம்" நாடகங்களும் மற்றும்
கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இரு நாட்களுக்கும் நுழைவு நன்கொடை
ரூ. 10, 5, 2 பெண்களுக்கு ரூ. 1.

வரவேற்புக்குழுத் தலைவர்:	செயலாளர்கள் :	பொருளாளர் :	தொண்டர்படைத் தலைவர்கள்:
கே. டி. எஸ். மணி	மா. வே. நாராயணசாமி, தி. நா. சம்பந்தம் செ. ஏ. பலராமன் சி. எஸ். பூஞ்சோலை	சிவானந்தம்	வி. என். மார்க் மீஞ்சூர் மு. முருகேசன்

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3